உ

சிவமயம்.

சேஷமூலை என்று வழங்கிவருகிற

# கௌரீபுரி

# ஸ்தலபுராணச் சுருக்கம்.

இது

சேஷமூலை

மு. அப்பாசாமி குருக்களவர்களால்

கிரந்தத்திலிருந்து

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1912.

H69 / 294 S35

68497

Q2/3 : 38 · 21199.G
N12

உ. கணேசன்
செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட நாள்
அக்டோபர் மாதம் 1986 வருடம்
செப்பனிட்டு முடித்த நாள்
அக்டோபர் மாதம் 1986 வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.



சார்த்தூலஹரமூர்த்தி.

## சேஷமூலை என்று வழங்கிவருகிற

## கௌரீபுரி

# ஸ்தலபுராணச் சுருக்கம்.

இந்த க்ஷேத்திரம் திருப்புகலூருக்கு ஈஸான்யம், காரைக்கால்கோவில் பத்துக்கு நிருதி, அரிநதிக்குத் தெற்கு, செய்யாத்தமங்கைக்கு வடக்கு, பூந்தோட்டம் ரயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கு, காரைக்கால் ரோட்டில் இருக்கிறது.

தஞ்சாவூர் ஜில்லா நன்னிலம் தாலூகா சேஷமூலை கிராமம் மு. அப்பாசாமி குருக்களால் கிரந்த புராணத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

பூர்வகாலத்தில் தாருகாவன ரிஷிகள் யாகத்தில் உண்டான யானையைச் சங்கரித்து, ஷை ரிஷிகள் மனவருத்தத்துடன் புறப்பட்டுக் கௌரீபுரிக்கு மேற்கில் ஒரு கடிகையில் வந்து, தேவதாருவனம் மிகுதியாய் இருப்பதைக்கண்டு அந்தவிடத்தில் ஆபிசார யாகம்செய்ய, அந்த ஹோமகுண்டத்தினின்று புறப்பட்ட புலியைச் சீக்கிரத்தில் சிவபெருமானை சம்ஹரித்துவாயென்று அனுப்ப, ஷை புலி அதிவேகமாகவர சிவபெருமான் பார்த்து அதின் வாலை யெட்டிப்பிடித்துப் பாய்ந்து மிதித்துச் சூலத்தால் குத்தி வீரநடனம் செய்தனர். புலி வாராததை ரிஷிகள் அறிந்து மஹாகோபத்துடன் வேகமாக ஆஹுதிகள் செய்ய ஷை குண்டத்தினின்று காளி

ஒன்று பிரசன்னமாய் வர, பரமசிவனை நீ ஜெயித்துவருவாயென்று அனுப்ப, காளியானவள் ஆக்ரமித்து வருவதைத் தாண்டவமூர்த்தி கண்டு, தன்னைப் பிரார்த்தித்துக்கொண்டிருந்த வால்மீகரிஷியை அழைத்து, இப்போது காளிவருகிறாள், அவளிடத்தில் ஊர்த்வநிர்த்தநம் செய்யவேண்டும், நீர் தரிசனம் செய்யலாம் என அழைத்து வடவிருக்ஷத்தின் அருகில் நின்று காளியை எதிர்பார்க்கும் சமயத்தில் காளி ஆக்கிரமித்து வர, காளியைப் பார்த்து நீ எங்கிருந்து வந்தவள் என்று கேட்க, நான் ரிஷிகளால் அனுப்பப்பட்டவள், உம்மோடுகூட நடனம்செய்து ஜெயிக்கவந்தேன், இதோ நடனம் செய்கிறேன் பார் என்று நடனம் செய்தனள். பரமசிவன் காளியைப் பார்த்து இதோ ஜெயிக்கிறேன் என்று சார்த்தூலத்தின்மீது வலது பாதத்தை ஊன்றி இடது பாதத்தை மேலே தூக்கி ஊர்த்வதாண்டநம் செய்தார். காளி பார்த்து அவமானப்பட்டுப் பரமசிவனை நோக்கி ஸ்தோத்திரம் செய்தனள். பரமசிவன் சந்தோஷித்து, நீ பயப்படவேண்டாம், நீ நம்முடைய சத்திரூபமானதால் நீ செய்த அபசாரத்தைப் பொறுத்தருளினோம், நீ நம்முடைய சந்நிதானத்திற்கு எதிரில் இருக்கும் தீர்த்தத்திற்கு உம்முடைய பெயரை வைத்து ஸ்நாநம்செய்து நம்மைப் பூஜித்து நீ எங்கிருந்து வந்தாயோ அவ்விடம்போய்ச் சிவலிங்கபிரதிஷ்டைசெய்து உன்னுடைய நாமத்தினால் உன் இஷ்டலிங்கத்தைப் பூஜைசெய்து வருவாயாக என்று சொன்னார். இக்காலத்தில் கௌரீபுரிக்கு மேற்கில் உள்ள மூர்த்திக்கு சாமுண்டீசுவரன் என்று பெயர் வழங்கிவருகிறது.

## ஷை க்ஷேத்திரத்தைப் பூஜைபண்ணினவர்களின் விவரம்.

பிரஹ்மா ஐந்து சிரசுடன் கைலாசத்தில் சந்தியாயிருந்த காலத்தில் பார்வதிக்கு நேர்ந்த சந்தேகத்தினால் அதில் உண்டான தோஷம் நிவிர்த்தியாகும்பொருட்டுப் பூஜைசெய்தார். கௌதமரிஷி சிவக்ஷேத்திர தரிசனம்செய்து பூஜைசெய்தார். அகஸ்தியர் கௌரி கல்யாண தரிசனத்திற்குப் பூஜைசெய்தனர். போஜராஜபுத்ரியாய் அவதாரம்செய்து கௌரீயென்று நாமதேயத்தைப் பூண்டு கல்யாணம் செய்ததுடன் தெரிசனம் கொடுத்தார்.

6547

கௌதமர் பூஜைசெய்ய வந்து வசிக்கும்காலத்தில் அகலிகையின்மீது இச்சைகொண்டதனால் சாபம் சம்பவித்து யோனி சஹிதமான சரீரத்துடன் வரும்சமயத்தில், சநீசுவர பகவானுடைய உதவியினால் துலாவிழு புண்யகாலத்தில் பூஜைசெய்தார் இருந்தான். விதர்ப்பதேசத்தில் சுந்தரபோஜனென்று ஒரு ராஜன். அந்த ராஜனுக்குப் புத்திரனில்லாமல் வருத்தபட்டு நிற்கும்காலத்தில் அசரீரிவாக்கினால் கௌரீபுரியை அடைந்து சிவபூஜைசெய்து, கௌரீதேவியே புத்ரியாய் அவதாரம் செய்தார். யாதெனில், கைலாசத்தில் வேடிக்கையாய் ஸ்வாமியின் கண்ணை அம்மன் மூட அந்தக்ஷணத்தில் திரிபுவனமும் இருள் சூழ, தேவதைகள் முறையிட, அம்மன் கையையெடுக்க, வெளிச்சம் தோன்ற, தேவதைகள் இருப்பிடம்செல்ல, பிறகு பார்வதியைப் பார்த்து பரமசிவன் சொல்லுகிறார்: நம்மை விட்டுப் பூலோகத்தில் சென்று போஜராஜனுக்குப் புத்திரியாய்ப் பிறந்து கௌரீபுரியில் தவம்செய்; அந்த க்ஷேத்திர

மோ நடனக்ஷேத்திரம்; அதில் நாம் உன்னைக் கல்யாணம் செய்துகொள்ளுகிறோம். புரூருவசக்கிரவர்த்தி சிவனைப் பூஜை செய்து சனி விமோசனம் செய்தார். முசுகுந்த சக்கிரவர்த்தி தாண்டவ தரிசனம் செய்யவந்தபோது தியாகராஜாவாகத் தரிசனம் கொடுத்ததும், ராமமூர்த்தி வனவாஸகாலத்தில் பூஜை செய்ததும், அகலிகை சாபவிமோசனமானதும், விக்நேச்வரன் கஜமுகாசூரனைச் சம்ஹாரம்செய்து வீரஹத்தி விமோசநநிமித்தம் திருச்செங்காட்டங்குடியில் பூஜைசெய்ததும் இந்தக் கௌரீபுரி க்ஷேத்திரத்தில்தான். தக்ஷன் கார்க்கோடகன் பரிக்ஷித்து நிமித்தம் கார்க்கோடக விஷத்தைக் கொடுத்து இறக்கும் வண்ணம் செய்தார்கள். ஆதிசேஷனானவர் அந்த தோஷம் தன்னை அடையாதபடி பூஜைசெய்தார்.

## தீர்த்தங்களின் முக்கியவிவரம்.

கௌரீஜநநமானதால் கௌரீதீர்த்தம், காளிதீர்த்தம், ஆதிசேஷதீர்த்தம், ராமதீர்த்தம் இவை உள்ளன. காளியுடன் ஊர்த்வதாண்டவம் செய்ததால் வடவிருக்ஷமும் மேற்குமுக சந்நிதியும் உள்ளது. நடனக்ஷேத்திரம் விசேஷம்.

68477